அதேபோல, போக்குவரத்து வசதியைப் பொறுத்தவரையில், இந்தப் பகுதியிலேயிருந்து காவேரி ஆற்றைக் கடப்பதற்கு பாலம் அமைப்பது multi–purpose ஆகும். பல்வேறு பயன்பாடுகளைத் தருகின்ற வகையிலே அமைந்துள்ள காரணத்தினால், செலவு சற்றுக் கூடுதலாக இருந்தாலும்கூட, மதிப்பீடு ஒரு மெகா வாட்டுக்கு ஏறத்தாழ 12 கோடி ரூபாய் வீதம் இரண்டு மடங்கு செலவாக இருந்தாலும்கூட, போக்குவரத்து வசதிகளைக் கவனத்தில் கொண்டு, கதவணை மின் திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அமைக்கப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதிக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துகின்ற வகையிலே கதவணையில் பாலத்தின் அகலத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கோரியுள்ளார்கள். ஏற்கெனவே இலகு ரக வாகனங்கள் செல்வதற்கு மதிப்பீடுகள் தயார் செய்தாலே, மெகா வாட்டுக்கு 12 கோடி ரூபாய் ஆகிறது. கனரக வாகனங்கள் செல்கின்ற வகையிலே, இன்னும் அந்தத் திட்டத்தை விரிவாக்கும்போது செலவு அதிகம் ஆகும் என்று கருதுகிறேன். இருந்தாலும்கூட, multi–purpose, பல நன்மைகளைத் தருகின்ற திட்டமாக இருப்பதால், மின்சார வசதி மட்டுமல்லாமல், விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், மிக அதிகமாக போக்குவரத்திற்கும் பயன்படும் என்ற வகையிலே, கூடுதல் செலவு வந்தாலும்கூட, அதுகுறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 391, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

391—

மேம்பாலம்

***1819—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 11]

செஞ்சி தொகுதி, பாலப்பாடியிலிருந்து புதுப்பாளையம் செல்லும் வழியிலுள்ள நந்தன் கால்வாய் தரைப்பாலத்திற்குப் பதிலாக மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

செஞ்சி தொகுதி, பாலப்பாடியிலிருந்து புதுப்பாளையம் செல்லும் வழியில், நந்தன் கால்வாயின் குறுக்கேயுள்ள தரைப் பாலம் உயர்மட்டப் பாலமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை 2012 ஆம் ஆண்டு கேட்டிருந்தேன். பருவமழைக் காலங்களில், அந்த ஏரி நிரம்பி, உபரி நீர் வெளியேறும்போது, அங்குள்ள கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டு, திட்டுபோல், தனித் தீவுபோல் இருக்கும். அதனால், அங்கு பாலம் கட்டப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தவுடன், அதை உடனடியாகப் பரிசீலனை செய்து, அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில், மழைக் காலங்களில் போக்குவரத்தை உறுதி செய்யும்வகையில், அந்தப் பகுதி மக்களுக்காக மேம்பாலத்தை கட்டிக் கொடுத்தமைக்கு தமிழக அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அந்தப் பாலத்திற்கு இரண்டு கிலோ மீட்டருக்கு முன்னால் அதே பாதையில், சத்தியமங்கலத்திலிருந்து, சோ. குப்பம் செல்லும் சாலையில், அந்தக் கால்வாயின் தொடர்ச்சியில், சிமென்ட் பைப்புகள் கொண்டு தரைப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் கனிவோடு பரிசீலனை செய்து, அந்தப் பாலத்தையும் உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்டிக் கொடுக்குமாறு இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் ஒரு கோரிக்கையை வைக்கின்றேன்.*

திண்டிவனம்–கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையின் விரிவாக்கப் பணிகள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் இப்போது நடைபெற்று வருகின்றன. செஞ்சி பேரூராட்சிக்கு உள்ளே நுழையும் இடத்தில் சங்கராபரணி ஆற்றின்மீதான பாலப் பணிகள் Transstroy *நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாக நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.*

மிகவும் பழுதடைந்த அந்தப் பாலத்தை பராமரிக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், கான்கிரீட் கம்பிகள் எல்லாம் வெளியே தெரியக்கூடிய அளவிற்கு மிகவும் பாழ்பட்டு இருக்கின்றன. எனவே, உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, அந்தப் பாலத்தைச் செப்பனிட்டு, சீர்படுத்தித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி–திண்டிவனம் சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சாலையில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2014 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பாலம் பழுதடைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்கள். அந்தப் பாலத்திலுள்ள பழுதை நீக்குவதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் விரைந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை–மதுரை, சென்னை–புதுக்கோட்டை, திருச்சி மாநகர் மற்றும் விமான நிலையம் செல்லும் முக்கிய சாலைகள் இணையும் இடம் என்னுடைய திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட பொன்மலை ஜி. கார்னர் பகுதி. அதுமட்டுமல்லாமல், இரயில் பெட்டிகள் தயார் செய்யும் தொழிற்சாலைக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் கடக்கும் பகுதியான இந்தப் பிரிவு சாலை, தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. எனவே, விபத்து மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்க்கின்ற வகையிலே, அங்கே ஒரு மேம்பாலம் அல்லது Roundtana அமைத்து, அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிட அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் Roundtana அமைக்கப்படுமா என இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். அங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்படும்பட்சத்தில், அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, நிதிநிலைக்கேற்ப அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஆகஸ்ட் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, நன்செய்புளியம்பட்டி, பங்களாப்பூர் பகுதியில் பவானி ஆற்றின் குறுக்கே உள்ள நூறு ஆண்டுக்கால பழமையான பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, நபார்டு திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் பாலப் பணிகளை எடுத்து நிறைவேற்றி வருகிறது. அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பாலத்தை ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

முற்பகல் 10–20

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய சங்கரி தொகுதியில் புள்ளாக்கவுண்டம்பட்டி கிராமத்தில் மேட்டூர் கிழக்குக் கரை கால்வாயின் கிழக்குப் பகுதியில் சுமார் 800 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. கொடாரம்பாளையம், வைகுண்டம்பாளையம், தொட்டிப்பாளையம் ஆகிய ஊர்கள் அந்தப் பகுதியில் அமைந்துள்ளன. இந்த ஊர்களுக்குச் செல்ல*

2014 ஆகஸ்ட் 11]

வேண்டுமென்றால், மேட்டூர் கிழக்குக் கரை கால்வாயைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். கால்வாயில் தண்ணீர் வரும் காலங்களிலும், தண்ணீர் வராத காலங்களிலும் அந்தக் கால்வாயைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். அந்தக் கால்வாயைத் தாண்டிச் செல்வதற்கு அப்பகுதியில் பாலங்கள் ஏதும் இல்லை. அதனால், விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களுக்கு டிராக்டர் மற்றும் கால்நடைகளைக் கொண்டு செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். மழைக் காலங்களில் பள்ளிக் குழந்தைகளும், பெரியோர்களும் கால்வாயைக் கடந்து செல்ல சிரமப்படுகிறார்கள். மேலும், அவசரகாலங்களில் மருத்துவமனைக்குச் செல்லவும் வேறு வழி இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்பகுதிவாழ் மக்களின் நலன் கருதி, பாலம் கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புள்ளாக்கவுண்டம்பட்டி பகுதியில் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. அக்கிராமங்களுக்குச் செல்வதற்கு ஏதுவாக, மேட்டூர் கிழக்குக் கரை கால்வாயின் குறுக்கே பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். கால்வாய்க்கு இருபுறமும் உள்ள சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருமெனில், அந்தக் கால்வாயின் குறுக்கே நெடுஞ்சாலைத் துறை மூலமாக பாலம் கட்டிக் கொடுக்கப்படும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கால்வாய் பொதுப் பணித் துறையின்கீழ் வருவதால், அத்துறையின் மூலமாகத்தான் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதுக்கூர் ஒன்றியத்தில் உள்ள சொக்கனாவூர் பாலம் கிட்டத்தட்ட 50 வருடங்களுக்குமுன் கட்டப்பட்ட தரைப் பாலம். மழைக் காலங்களில் வெள்ளம் வந்தால், அந்தப் பகுதி துண்டிக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அதை உயர்மட்டப் பாலமாகக் கட்டித் தர ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சொக்கனாவூர் பகுதியில் உள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆண்டு, பாலங்கள் கட்டுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, ஒதுக்கப்பட்ட நிதிக்கு ஏற்றவாறு, எத்தனை பாலங்கள் கட்டப்படும் என்ற விவரம் குறித்து பேரவை விதி 110—ன்கீழ் அறிவிப்பு செய்துவிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில், அடுத்த ஆண்டு புதிய உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஏதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு அவருடைய கோரிக்கை கொண்டு செல்லப்பட்டு, அனுமதி பெறப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.

திரு. மு. ராஜநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம், எங்களை வாழ வைக்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தையும், இராமநாதபுரம் மாவட்டத்தையும் இணைக்கும் திருப்புனவாசல்—ஓரியூர் தரைப்

2014 ஆகஸ்ட் 11]

பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தையும், இராமநாதபுரம் மாவட்டத்தையும் இணைக்கின்ற தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக்கணக்கான பாலங்கள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற இடங்களிளெல்லாம் பாலங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மக்களின் தேவையைக் கருதி, அங்கு எழும் பிரச்சினைகளையொட்டி, அங்குள்ள தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். எனவே, அடுத்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியில் அமைந்துள்ள தேனி நகரம், மாவட்டத் தலைநகரம் ஆகும். அங்கு வாரத்தில் இரண்டு நாட்கள் சந்தை நடைபெறும். அப்பொழுது மிகப் பெரிய அளவில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும். அங்குள்ள பெத்தனாட்சி கோயிலுக்கு அருகில் இரயில்வே கிராசிங் இருக்கின்றது. தற்போது,

அந்தப் பகுதியில் இரயில் போக்குவரத்து இல்லை. மிகப்பெரிய அளவில் போக்குவரத்து நெருக்கடி இருப்பதால், அந்தப் பகுதியில் மேம்பாலம் ஒன்று அமைத்துக் கொடுத்தால், போக்குவரத்து நெருக்கடி குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதுகுறித்த ஆய்வு, நீண்டகாலமாக நிலுவையில் இருக்கிறது. அந்தப் பகுதியில் பாலம் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரயில்வே கடவின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இரயில்வே கடவு வழியே இரு பக்கமும் செல்கின்ற வாகனங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்குக் குறையாமல் இருந்தால்தான், அங்கு இரயில்வே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மத்திய அரசு இசைவு அளிக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஆய்வு செய்து, அந்த இரயில்வே கடவு வழியாக ஒரு இலட்சம் வாகனங்கள் செல்லுமானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பாலம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 392, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

392—

தொழிற்பேட்டை

***29752—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—